# 04-05-2024 செய்தி

## ‘கள்ளக்கடல்’ நிகழ்வு கேரளாவுக்கு ரெட் அலெர்ட்

- கேரளா மற்றும் தென் தமிழக கடலோரப் பகுதிகளில், இன்று மற்றும் நாளை, ‘கள்ளக்கடல்’ நிகழ்வுக்கு வாய்ப்பு உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
- எந்த விதமான அறிகுறியுமின்றி திடீரென கடல் சீற்றம் அடைவது, ‘கள்ளக்கடல்’ நிகழ்வு என்றழைக்கப்படுகிறது.
- திருடனை போல சற்றும் எதிர்பாராத தருணத்தில் வருவதால், கேரள மக்கள் இதை, கள்ளக்கடல் என அழைக்கின்றனர்.
- கேரளா மற்றும் தென் தமிழக கடலோரப் பகுதிகளில் இன்று மற்றும் நாளை, கள்ளக்கடல் நிகழ்வுக்கு வாய்ப்பு இருப்பதாக, இந்திய தேசிய கடல் தகவல் சேவை மையம் மற்றும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் எச்சரிக்கை விடுத்துள்ளன.
- இந்த நிகழ்வு, இன்று அதிகாலை 2:30 மணி முதல் ஞாயிற்றுக்கிழமை இரவு 11:30 மணி வரை ஏற்பட வாய்ப்புள்ளதால், ‘ரெட் அலெர்ட்’ பிறப்பிக்கப்பட்டு உள்ளது.
- இந்த கால கட்டத்தில் மிக வலுவான அலைகள், கடல் சீற்றம் மற்றும் கடல் உள்வாங்கல் போன்றவற்றுக்கு வாய்ப்பு உள்ளது. எனினும், இது சுனாமி போன்ற நிகழ்வு அல்ல.
- மீனவர்கள் தங்கள் மீன்பிடி படகுகள் மற்றும் உபகரணங்களை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.
- பொதுமக்கள் கடற்கரைக்கு செல்வதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

## தொழில்நுட்ப பொருட்கள் இறக்குமதியில் சீனா ஆதிக்கம் அதிகரிப்பு

- இந்தியாவின் மின்னணு, தொலை தொடர்பு மற்றும் மின்சார பொருட்கள் இறக்குமதி, கடந்த 2024ம் நிதியாண்டில், 7.45 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.
- இதில் பாதிக்கும் மேற்பட்டவை, ஹாங்காங் மற்றும் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதாக ஜி.டி.ஆர்.ஐ., அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- நாட்டின் தொலைதொடர்பு, மின்னணு மற்றும் மின்சார பொருட்கள் இறக்குமதியில், சீனாவின் பங்கு 43.90 சதவீதமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இது குறித்து, ‘குளோபல் டிரேடு ரிசர்ச் இனிஷியேட்டிவ்’ அறிக்கையில் தெரிவித்து இருப்பதாவது:
- இந்தியா அதன் இறக்கமதிக்கு ஹாங்காங் மற்றும் சீனாவை சார்ந்திருப்பது, கடந்த சில ஆண்டுகளில் கணிசமாக உயர்ந்துள்ளது.
- போன்கள் மற்றும் ஒயர்லெஸ் சாதனங்கள் உள்ளிட்டவற்றை உள்ளடக்கிய தொலை தொடர்பு சாதனங்களின் இறக்குமதி, 30,627 கோடி ரூபாயாக உள்ளது.
- இத்துறை பொருட்களுக்கான சந்தையில், சீனாவின் பங்கு 50 சதவீதத்துக்கு மேலாக உள்ளது.
- நாட்டின் டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப இறையாண்மையை பாதுகாப்பதற்கு, சீனாவை சார்ந்திருக்கும் இறக்குமதி அளவு குறைக்கப்பட வேண்டும்.
- நம் அன்றாட வாழ்க்கையில் இத்துறைகள் மிகவும் முக்கியமாக உள்ளன.
- இந்தியா இத்துறை பொருட்கள் இறக்குமதிக்கு, சீனாவை பெரிதும் சார்ந்திருப்பது, நாட்டின் தன்னாட்சி மற்றும் பொருளாதார பாதுகாப்புக்கு பெரும் சவால்களை அளிக்கும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

SURESH'